**அரசகரும மொழிகள் ஆணைக்குழு – 2016**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 12,604,490 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு 2017 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 யூன் 20 ஆந் திகதி வரையிலும் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த அறிக்கையை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதாக தலைவரால் 2017 மே 26 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1981 இன் 28 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1982 இன் 03 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | ஊழியர் சேமலாக நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புப் பணம் செலுத்துதல் அடுத்துவரும் மாதத்தின் 30 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டில் 04 மாதங்களுக்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்தும் போது 01 மாதம் முதல் 05 மாதங்கள் வரையிலான வீச்சிலான தாமதமொன்று ஏற்பட்டமையின் காரணமாக ரூபா 243,453 மிகைக் கட்டணமொன்றை செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 2,705,554 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 820,359 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,525,913 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. மீண்டெழும் மானியம் ரூபா 1,690,000 இனால் குறைவடைந்தமை மற்றும் சம்பள வேதனங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் ரூபா 2,364,250 இனால் அதிகரித்தமை நிதி விளைவின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 4,707,830 தொகையான பற்றாக்குறையானது 2013 ஆம் ஆண்டிலிருந்து சீராகக் குறைவடைந்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 820,359 மிகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,705,554 பற்றாக்குறையொன்றிற்கு உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 4,376,484 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 17,670,540 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 14,461,845 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1991 இன் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நோக்கங்களாக அரசகரும மொழிகளின் பாவனை தொடர்பாக கொள்கை ரீதியான தத்துவங்களை சிபாரிசு செய்தலும் மேற்பார்வையிடலும், மொழிப்பாவனை அரசியலமைப்பின் IV பந்திக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றமையை கண்காணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், அரசகரும மொழி மதிப்பீட்டை ஊக்குவித்தல் மற்றும் மொழிப் பாவனை தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்காக புலனாய்வுகளை மேற்கொள்ளலும் மீள் நடவடிக்கை எடுத்தல் என்பனவாகும்.

## 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

விற்பனை செய்வதற்காக 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து அச்சிட்டு நடைமுறைச் சொத்தாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 838,940 பெறுமதியான புத்தக இருப்பை விற்பனை செய்ய முடியாதிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 79,675 பெறுமதியான புத்தகங்கள் மொழிரீதியான நிகழ்ச்சித்திட்டங்களின் போது இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய புத்தகங்களின் இருப்பு பாதுகாப்பற்ற முறையில் உடைந்த பொருட்களுடன் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்தி

2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 43,024 ஆன கிரயத்தில் கணக்கீட்டு நடவடிக்கைகளைச் மேற்கொள்வதற்காக மென்பொருளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்குரிய செலவினங்களை இனங்காணாமை, சரியான கணக்குகளில் செலவினங்கள் பதியப்படாமை, வரையப்பட்ட காசோலைகள் கையளிக்கப்படாமல் கையில் வைத்திருந்தமை, பணிக்கொடைகள் சரியாகக் கணக்கீடு செய்யப்படாமை, நாட்குறிப்புப் பதிவுகளுக்காக நாட்குறிப்பு உறுதிச்சிட்டுக்கள் பயன்படுத்தப்படாமை போன்ற கணக்கீட்டு குறைபாடுகள் காணப்பட்டமையின் காரணமாக கணக்கீடு தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.